# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1819/2 - 2013 ජූලි මස 15 වැනි සඳුදා - 2013.07.15

*1819/2 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு,முதலீட்டு விடயம் தொடர்பான அமைச்சர் என்ற வகையில் முதலீட்டு ஊக்குவிப்புக்கள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகிய நான், இக்கட்டளை மூலம் பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறேன்:-*

*(1) மேல் மாகாணத்தில் மீரிகம ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயத்தில் மத்திய லங்காசியர் பல்கலைக்கழகத்தின் கிளை வளாகம் ஒன்றை நிறுவுவதற்கான கருத்திட்டத்தை மேற்படி சட்டத்தின் தேவைகளுக்காகச் செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றாக இனங்கண்டு அது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தகவல் அடங்கிய அறிவித்தல் 2013, பெப்புருவரி 06 ஆந் திகதிய 1796/8 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.*

*(2) உத்தேசக் கிளை வளாகத்தின் முகாமைத்துவம் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்வதில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் அதன் நடவடிக்கைகளுக்கு ஏற்புடைத்தாகும் என்பதாக இருந்தால், அவ்வளவுக்கு இணங்கியொழுகும் என்பதை கருத்திட்டக் கம்பனி உறுதிப்படுத்தும் என்பதோடு இத்தகைய கருத்திட்டம் தேசிய நலனைக் கொண்டதாக இருப்பதோடு அது நாட்டுக்குப் பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை ஈட்டித் தரும்.*

*(3) மேல் மாகாணம், மீறிகம ஏற்றுமதிச் செயற்பாட்டு லலயத்தில் மத்திய லங்காசியர் பல்லைக்கழகத்தின் கிளை வளாகம் ஒன்றை நிறுவுவதற்கான கருத்திட்டத்தை மேற்படி சட்டத்தின் தேவைகளுக்காக செயலநுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாகப் பிரகடனப்படுத்துவதற்காக 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் பிரகாரம் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.*

*(4) "மேல் மாகாணம், மீறிகம ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயத்தில் மத்திய லங்காசியர் பல்கலைக்கழகத்தின் கிளை வளாகம் ஒன்றை நிறுவுவதற்கான கருத்திட்டம் " என மேற்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் பெயரிடப்பட்டு இனங்காணப்படுவதோடு கருத்திட்ட கம்பனி வரையறுக்கப்பட்ட உக்லான் லங்கா (தனியார்) நிறுவனம் என அழைக்கப்படும் ;*

*(5) இலங்கை முதலீட்டுச் சபையுடன் 2012, திசெம்பர் 13 ஆந் திகதி கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் திகதியில் இருந்து பத்து (10) வருடக் கலப்பதியொன்றுக்குள் நான்கு (04) கட்டங்களில் மேற்படி கருத்திட்டம் அதன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் ; மற்றும்*

(6) இக்கட்டளையின் அட்டவணையின் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களில் இருந்தான விலக்களிப்புக்கள் கருத்திட்டக் கம்பனிக்கு ஏற்புடைத்தாகும் என்பதோடு இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அவை அமுலில் இருக்கும். இவ்விலக்களிப்புக்கள் 2012, திசெம்பர் 13 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும்.

**அட்டவணை**

(அ) **2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்**

(i) கருத்திட்டத்தில் இருந்து கிடைக்கும் இலாபம் மற்றும் வருமானம் தொடர்பில் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணரட்டரசிறைச் சட்டத்தின் இலாபம் மீதான வருமான வரி விதிப்பனவு ஏற்பாடுகள் பதினைந்து (15) வருடக் காலப்பகுதியொன்றுக்கு கருத்திட்டக் கம்பனிக்கு ஏற்புடைத்தாகாது (“வரி விலக்களிப்புக் காலப்பகுதி”) குறிக்கப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதி மற்றும் அதற்குப் பிந்திய ஒரு (01) வருடக் காலப்பகுதியொன்றுக்கு இலாபத்தில் இருந்து பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் பங்கீடு மீது வருமான வரி விலக்களிக்கப்படும்.

கருத்திட்டக் கம்பனி வரி விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த ஐந்து (05) ஆண்டுகளின் பின்னர், அவற்றுள் எது முந்தி வருகிறதோ, அந்த ஆண்டு தொடக்கம் குறிப்பிடப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி ஆரம்பமாகும்.

மேற்சொன்ன வரி விலக்களிப்புக் காலப்புகுதி முடிவடைந்த பின், கருத்திட்ட கம்பனியின் இலாபங்கள் மற்றும் வருமானம் மீது அக்காலப்பகுதியில் ஏற்புடைத்தான வரி வீதத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து சதவீதம் (25%) வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் கடைசித் திகதியை உடனடுத்து வரும் (10) பத்து வருடக் காலப்பகுதியொன்றுக்கு விதிக்கப்படும்.

(ii) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆகக்கூடிய ஊழியர்கள் இருபது (20) பேர்களுக்கு மேற்படாத கருத்திட்டக் கம்பனியின் வெளிநாட்டு ஊழியர்கள் நீ. உ. செ. வரி அறவிடப்படுதல் மற்றும் செலுத்தலில் இருந்து விலக்களிக்கப்படுவர். வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து ஐந்து (05) வருடக் காலப்பகுதியொன்றுக்கு இச்சலுகை ஏற்புடைத்தாகும்.

(iii) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் எந்தவொரு ஏற்பாட்டின் கீழும் வருமான வரி செலுத்துவதில் இருந்த பெறுநர் முழுமையாக விலக்களிப்புப் பெறுவதோடு பின்வருவன தொடர்பாகக் கருத்திட்டக் கம்பனிக்கு தடுத்து வைக்கும் வரி செலுத்துவதில் இருந்த விலக்களிப்பு ஏற்புடைத்தாகும் :-

(அ) மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டி ;

(ஆ) உசாத்துணையாளர்களுக்கு வழங்கப்படும் தொழில்நுட்பக் கட்டணம் ;

(இ) மொத்த வருமானத்தில் இருந்து 3% வரையிலான முகாமைத்துவக் கட்டணங்கள் ;

(ஈ) மொத்த வருமானத்தில் இருந்து 1. 5% வரையிலான பங்குவீத உரிமைத் தொகைக் கொடுப்பனவுகள் ;

(உ) மொத்த வருமானத்தில் இருந்து 1. 5% வரையிலான சந்தைப்படுத்தல் கட்டணங்கள் ;

(ஆ) **2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்**

கருத்திட்டத்தின் அமுலாக்கக் காலப்பகுதியில் கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மற்றும் சேவை மற்றும் கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் சேர்பெறுமதி வரி அறவிடல் மற்றும் கொடுப்பனவில் இருந்து 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் கீழ் முழுமையாக விலக்களிப்பு வழங்கப்படும் கம்பனி/ கருத்திட்டத்துக்கு நேரடியாகப் பொருட்களை வழங்குபவர்களுக்கு மாத்திரமன்றி கருத்திட்டக் கம்பனி அனுமதித்தவாறான சேர்பெறுமதிச் சட்டத்தின் விளக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவாறாக கருத்திட்டக் கம்பனி/ கருத்திட்டத்துக்காக ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு உப ஒப்பந்தக்காரர் ஒருவர் வழங்கும் பொருட்களுக்கும் சேர்பெறுமதி வரி விலக்களிப்பு ஏற்புடைத்தாகும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

(இ) ***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்***

*கருத்திட்டத்தில் அமுலாக்கக் காலப்பகுதியின் போது கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட சகல பொருட்கள் மீதும் (அவை கம்பனியால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டாலும் கருத்திட்டக் கம்பனியால் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் மூலம் பெறப்பட்டாலும்) துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவு மற்றும் அறவீட்டில் இருந்து கருத்திட்டக் கம்பனிக்கு முழுமையாக விளக்களிப்பு வழங்கப்படும்.*

(ஈ) ***2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம்***

*கருத்திட்டத்தில் அமுலாக்கக் காலப்பகுதியின் போது 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கட்டிடக் கைத்தொழில் உத்தரவாத நிதி விதிப்பனவில் இருந்து கருத்திட்டக் கம்பனிக்கு அல்லது கருத்திட்டக் கம்பனியால் அனுமதிக்கப்பட்டவாறான உப ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு முழுமையாக விலக்களிப்பு வழங்கப்படும்.*

(உ) ***2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டம்***

*வரி விலக்களிப்புப் காலப்பகுதி முடிவுறும் வரை 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தின் பொருளாதார சேவை விதிப்பனவில் இருந்து கருத்திட்டக் கம்பனிக்கு விலக்களிப்பு வழங்கப்படும்.*

(ஊ) ***(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டணச் சட்டம்***

*கருத்திட்டக் கம்பனியால் நேரடியாக அல்லது கருத்திட்டக் கம்பனியால் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களால் கருத்திட்டத்தின் தேவைக்காக இறக்குமதி செய்யப்பட்ட சகலவையும்/ கருத்திட்டம் தொடர்பான உருப்படிகள் மற்றும் பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகளுக்கு சுங்கக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்களிப்பு வழங்கப்படும் ஆயின், அப்பொருட்கள் கருத்திட்டக் கம்பனியின் பெயரில் பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு கருத்திட்டத்தின் அமுலாக்கத் தேவைக்காக இறக்குமதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.*

லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, பா. உ.,
முதலீட்டு ஊக்குவிப்புக்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2013, யூலை 11.*

*8- 15*